# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2017/2018 (ஆகஸ்ட்/ செப்டம்பர் 2020)

TLS 4123 தென்னாசிய இலக்கியம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1. அ. சிங்கள நவீன இலக்கியத்தின் பிரதான பண்புகள் யாவை? (05 புள்ளிகள்)

   ஆ. பண்டைய சிங்கள இலக்கியங்களின் பல்வேறுபட்ட போக்குகள் குறித்து மதிப்பீடு செய்க. (15 புள்ளிகள்)

2. அ. நலிவுக் காலத்து தெலுங்கு இலக்கியப் போக்குகளை எடுத்துக்காட்டுக.(08 புள்ளிகள்)

   ஆ. தெலுங்கு இலக்கிய வரலாற்றில் மொழிபெயர்ப்புக் காலத்திலும் செயற்கை காவிய காலத்திலும் தோன்றிய இலக்கியங்களின் பண்புகள் பற்றி ஆராய்க. (12 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி விளக்குக

   அ. பொலநறுவை – கோட்டைக் காலச் சிங்கள இலக்கியங்கள்

   ஆ. இரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளின் போக்கு

   இ. தென்னாசியப் பிராந்தியத்தில் நிலவும் பண்பாட்டு ஒருமைக்கான பின்னனி.

   (10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி- II

4. "தென்னாசிய இலக்கிய மரபில் வாய்மொழி, அளிக்கை, எழுத்து மரபுகளுக்கிடையே நெருக்கமான உறவுண்டு" இராமாயண, மகாபாரத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க. (20 புள்ளிகள்)
5. மலையாள நவீன கவிதையின் வளர்ச்சி குறித்து கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)
6. கி.பி. 9ஆம் நூற்றாண்டு முதல் தற்காலம் வரையான காலப்பகுதியில் எழுந்த கன்னட இலக்கியங்களின் போக்குகளை காலகட்ட அடிப்படையில் எடுத்துரைக்குக. (20 புள்ளிகள்)
7. கன்னட புனைகதை எழுத்தாளர் லங்கேஷின் சிறுகதைகளின் சமூக நோக்கு பற்றி மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்)